கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 21 திங்கட்கிழமை (05.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 100

# தூதர்களின் மட்டக்களப்பு விஜயம் குறித்து அமைச்சுகளிடையே கருத்து முரண்பாடு

## ஆளை ஆள் சாடும் வாதப்பிரதிவாதம்

கொழும்பு,மார்ச்5

வெளிநாட்டுத் தூதுவர்கள் பலர் அடங்கிய உயர்மட்டக் குழு ஒன்று கடந்த மாதம் 27ஆம் திகதி ஹெலிக்கொப்டர்கள் மூலம் மட்டக்களப்புக்குச் சென்று தரையிறங்கிய சமயம், விடுதலைப் புலிகளின் மோட்டார்த் தாக்குதலுக்கு இலக்கான சம்பவம் இலங்கை அரசின் மூன்று அமைச்சுகளிடையே கருத்து முரண்பாட்டை உருவாக்கியிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

இலங்கை வெளிவிவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் இடர்முகாமைத்துவ, மனித உரிமைகள் விவகார அமைச்சு ஆகியவற்றின் உயர்மட்டத்தினரிடையிலேயே இந்த விவகாரம் கருத்து முரண்பாட்டை உருவாக்கியிருக்கின்றது.

அமெரிக்கா, இத்தாலி, ஜேர்மன் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் பல வெளிநாட்டு இராஜதந்திரிகள் அடங்கிய குழுவினரை இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் விவகார அமைச்சர் மஹிந்த சமரசிங்க, மட்டக்களப்பு நிலைமைகளை நேரில் காட்டுவதற்காகக் கூட்டிச் சென்றபோதே இந்தக் குழப்பம் ஏற்பட்டது என்பது தெரிந்ததே.

இச்சம்பவம் இடம்பெற்ற சமயம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் சீனாவுக்கு விஜயம் செய்திருந்த வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகம தமது சீன விஜயத்தை இடைநடுவில் கைவிட்டு அவசர அவசரமாக நாடு திரும்பினார்.

மட்டக்களப்புச் சம்பவத்தால் குழப்பமுற்றிருந்த இராஜதந்திர வட்டாரங்களைச் சமாளிக்கும் விதத்தில், கொழும்பில் உள்ள தூதுவர்களை அவர் விரைந்து மாநாடு ஒன்றுக்கு அழைத்து, அவர்களுடன் உரையாடினார்.

### வெளிவிவகார அமைச்சர்

இராஜதந்திரிகள்தலைநகருக்குவெளியே - அதுவும் யுத்தப் பிரதேசத்தை அண்டிய .பகுதிகளுக்கு - செல்லும் விஜயம் தொடர்பாக வழமையான இராஜதந்திர முறைகள்

(04ஆம் பக்கம் பார்க்க)

## உடுவிலில் கிளைமோர்

யாழ்ப்பாணம்,மார்ச்.5

உடுவில் மருதனார் மடம் வீதியில் நேற்று முன்தினம் இரவு படையினரின் வாகனத்தை இலக்குவைத்து கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் படையினர் பயணம் செய்த பஸ் சேதத்துக்கு உள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (1)

## புன்னாலைக்கட்டுவனில் விபத்து; 2 படையினர் பலி!

யாழ்ப்பாணம்,மார்ச் 5

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் இரு படையினர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனையின் பின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

படையினரின் இரு வாகனங்கள் மோதியதில் விபத்து இடம்பெற்றது என்று விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## ஓமந்தை முன்னரங்கு மீது புலிகள் ஷெல் தாக்குதல்

கொழும்பு,மார்ச்.5

வவுனியா ஓமந்தை முன்னரங்க நிலைகள் மீது நேற்று முற்பகல் 10மணியளவில் ஷெல் தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாக ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இத்தாக்குதலில் மூன்று படையினர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## பொத்துவில் பகுதியில் நேற்று மோதல்

கொழும்பு,மார்ச்5

அம்பாறை பொத்துவில் பகுதியில் நேற்று நண்பகல் விசேட அதிரடிப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த மோதலில் அதிரடிப்படையின் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார் என்று ஒருதகவல் தெவித்தது. எனினும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

அம்பாறை பொத்துவில் பகுதியில் படமலாவ என்னும் இடத்தில் ரோந்து சென்றவிசேட அதிரடிப்படை படையினர்

(03ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குரல் செய்மதி மூல ஒலிபரப்பு நேற்று ஆரம்பம்

கிளிநொச்சி,மார்ச் 5

'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் 69ஆவது பிறந்த தினமான நேற்று விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' செய்மதி மூலமான ஒலிபரப்பை ஆரம்பித்தது.

கிளிநொச்சியில் நேற்று மாலை 6 மணிக்கு நடந்த செய்மதி மூல ஒலிபரப்பு ஆரம்ப நிகழ்வில் மதியுரைஞர் பாலசிங்கத்தின் திருவுருவப்படத்திற்கு தமிழீழ

(04ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் கைதான இளைஞர்கள் நேற்று விடுவிப்பு

கொழும்பு,மார்ச் 5

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்றுமுன்தினம் வெள்ளவத்தைப் பகுதியில் கைதான நான்கு தமிழ் இளைஞர்களும் நேற்றுக்காலை பொலிஸாரால் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக்கொண்ட இந்த நான்கு இளைஞர்களும் கொழும்பில் தமது உயர்கல்வியைத் தொடர்ந்து வருகின்றனர் என்றும் - இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட

(03ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இருவர் சுட்டுக்கொலை!

வவுனியா,மார்ச் 5

வவுனியாவில் சூட்டுக்காயங்களுடன் நேற்றும் இரண்டு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. மகாரம்பைக்குளம் பகுதியில் கருப்பஞ்சாங்குளம் என்னும் இடத்தில் நேற்றுக்காலை இந்த சடலங்கள் காணப்பட்டன.

பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்தே பொலிஸார் இரு சடலங்களையும் மீட்டனர். சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. மதுரை வீரன் மகேந்திரன் (வயது-24), பிரேம ஜீவன் ரஞ்சன் (வயது-23) ஆகிய இருவரது சடங்களே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவர்கள் யாரால், எதற்காக கொல்லப்பட்டனர் என்பது தெரியவில்லை என்று

(03ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர் இன்று கிளிநொச்சிக்கு நெருக்கடி குறித்துப் புலிகளுடன் பேசுவதற்கு

கிளிநொச்சி,மார்ச்5

நாட்டின் அரசியல், இராணுவச் சூழ்நிலைகளில் தற்போது உருவாகி இருக்கும் நெருக்கடி குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர்களோடு பேச்சு நடத்துவதற்காக நோர்வே தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று கிளிநொச்சிக்குச் வருகிறார்.

நோர்வேத் தூதுவர் இன்று முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி வந்துசேர்வார் என்று எதிர்பார்க்கப்படுவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து வவுனியாவரை ஹெலிக்கொப்டரில் வரும் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், அங்கிருந்து வாகனத்தில் கிளிநொச்சி வந்தடைவார்.

தூதுவர் எங்களைச் சந்திப்பதற்காக வரும் பட்சத்தில் தற்போதைய நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் எமது தரப்பு நிலைப்பாட்டை அவருக்கு விளக்குவோம் - என்று விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் கூறியது தெரிந்ததே.

நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் கிளிநொச்சி செல்லும்போது, அண்மையில் வெளிநாட்டு ராஜதந்திரிகள் மட்டக்களப்பில் ஷெல் வீச்சில் சிக்க நேர்ந்த சம்பவம் உட்பட முக்கிய விடயங்கள் விவாதிக்கப்படும் என்று நோர்வே ராஜதந்திர வட்டாரங்கள் குறிப்பிட்டிருக்கின்றன. (அ)

## கொழும்பில் கடத்தப்பட்டோரது விவரங்கள் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கு!

### மக்கள் கண்காணிப்புக் குழு திரட்டி அனுப்புகிறது

கொழும்பு,மார்ச் 5

இலங்கையில் கடத்தப்பட்டுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மக்கள் கண்காணிப்புக் குழு கடத்தப்பட்டவர்களின் விவரங்களைத் திரட்டி அவற்றை சர்வதேச மனித உரிமை அமைப்புகளிடம் சமர்ப்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இந்த நடவடிக்கை நேற்று கொழும்பில் உள்ள மேலக மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்றது. வடக்கு - கிழக்கு, புத்தளம் மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் கடத்தப்பட்ட 75பேரினது உறவினர்கள் தங்களது முறைப்பாடுகளை இந்த அலுவலகத்தில் பதிவுசெய்தனர்.

கொழும்பில் கடத்தப்பட்ட 35 பேரினது உறவினர்களும், கிழக்கில் கடத்தப்பட்ட 10 பேரினது உறவினர்களும் இம்முறைப்பாட்டாளர்களில் அடங்குவர்.

நேற்றுக்காலைமுதல் மாலை வரை முறைப்பாடுகளைப் பதிவுசெய்யும் நடவடிக்கை இடம்பெற்று, தகவல்கள் சேகரிக்கப்பட்டன. (ஐ)

### அரசியல் தீர்வு காணுமாறு

## இந்தியாவும் சர்வதேசமும் இணைந்து இலங்கைக்கு அதி உச்ச ராஜீக அழுத்தம் கொடுக்கவேண்டும்

### பாண்டிச்சேரியில் மாவை சேனாதிராஜா

பாண்டிச்சேரி,மார்ச் 5

இராணுவ உத்திகளை மேற்கொள்வதை நிறுத்தி, இனப்பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான அரசியல் தீர்வு ஒன்றைக் காணுமாறு இந்தியாவும் சர்வதேச சமூகமும் சேர்ந்து ராஜீக ரீதியான அழுத்தங்களை இலங்கை அரசாங்கத்துக்கு கொடுக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவின் உப தலைவருமான மாவை சேனாதிராசா பாண்டிச் சேரியில் தெரிவித்தார்.

பாண்டிச் சேரி முதல்வர் என்.ரங்கசாமியைச் சந்திப்பதற்காக இங்கு விஜயம் செய்திருந்த மாவை சேனாதிராசா நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:- இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அந்த நாட்டு அரசாங்கத்தின் மீது இந்தியாவும் சர்வதேசமும் சேர்ந்து சாத்தியமான அரசியல் தீர்வு ஒன்றைக் காணுமாறு அதி உச்ச அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அவ்வாறு செய்ய இயலாவிடில், எங்களுடைய விடுதலைப் போராட்டத்தை

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

திரு.திருமதி ஸ்ரீரங்கநாதன் -சிவரஞ்சினி
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**அபினன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (05.03.2007) திங்கட்கிழமை லண்டனிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, பூட்டிமார், அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், தம்பி, மச்சான், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகரின் ஆசி வேண்டி பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (58547)




கைதடி மத்தி, கைதடி. அம்மப்பா த.புஸ்பராஜா குடும்பத்தினர்.

## முட்டை விலை திடீரென அதிகரிப்பு

யாழ்.நகரப்பகுதியியில் முட்டை விலை திடீரென உயர்ந்துள்ளது. அண்மையில் 20 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை இப்போது 30ரூபாவுக்கு விற்கப்படுகிறது. மீன்பிடித் தொழிலுக்கு தடை ஏற்பட்டதால் முட்டை விலை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை மரக்கறி வகைகளின் விலை குறைந்துள்ள பொழுதும் 100கிராம் சூடைக் கருவாடு 100ரூபாவிற்கு விற்கப்படுகிறது. நெடுந்தீவுப் பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட கருவாடுகள் நகரப்பகுதிகளிலும் கடைகளிலும் மீன்சந்தைகளிலும் விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-88)

## நினைவலைகளில் 5ஆம் ஆண்டு

அவனிக்கு வரவு
08 . 05 . 1940



அவனிடம் விரைவு
15 . 02 . 2002

**அமரர் சுப்பர் அப்புத்துரை (விதானை)**

திதி: 05.03.2007

அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் ஒளி விளக்காய்
இதயத்தில் கலந்த எம் தெய்வமே!
ஆண்டுகள் ஐந்து ஆகியும்
அகலவில்லை உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு.....

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(58641)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

யா/குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலய ஆசிரியையான மொறின் ஞானசீலன் அவர்களின் அன்புத் தந்தை

**மத்தேசு பாவிலுப்பிள்ளை**

03.02.2007 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/குப்பிளான் விக்கினேஸ்வரா
பாடசாலைச் சமூகம்,
குப்பிளான்.

(58609)

## கட்டடம் வாடகைக்கு

மல்லாகம் சந்தியில் கட்டடத் தொகுதி ஒன்று (3கடை) வாடகைக் குண்டு.

தொடர்பு :
திருமதி நவமணி சோமசுந்தரம்,
மல்லாகம்சந்தி,
மல்லாகம்.

## ஏலவிற்பனை

கொம்ரெக் நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் பொருள்கள் 09.03.2007 அன்று பி.ப 2மணிக்கு நிறுவன மண்டபத்தில் ஏலத்தில் விடப்படவுள்ளன.

1.தையல் இயந்திரம்
2.தட்டெழுத்து இயந்திரம் (ஆங்கிலம், தமிழ்)

சுழிபுரம்.
(ச.52147)

இயக்குநர்,
கொம்ரெக்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



நயினை பண்டிதர், வித்துவான்
உயர்திரு.
**கந்தசாமி குகதாசன்**
B.A.Dip.in Ed.S.L.E.A.S

மலர்வு
17.04.1925

உதிர்வு
18.02.2003

திதி: 05.03.2007

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

நயினாதீவு - 5 (58641) குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
14 . 06 . 1925



மறைவு
04 . 02 . 2007

**அமரர் மயில்வாகனம் சுவாமிநாதன்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (06.03.2007) செவ்வாய்க்கிழமை வில்லூன்றி தீர்த்தக்கரையில் நடைபெறும் . இந் நிகழ்விலும் நாளை மறுதினம் (07.03.2007) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப.11மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
14 . 02 . 1936



மறைவு
25 . 02 . 1997

**அமரர் முத்து நடராசா**

திதி: 05.03.2007

அன்போடும் பண்போடும் அறிவோடும்
வளர்த்த எமதருமை அப்பாவே!
நீங்கள் அருகிருந்து எமக்கு நல்வாழ்வு
தந்தீர்கள் - இப்போது
மறைந்திருந்தும் உங்கள் ஆசியுடன்
எமை வாழவைத்தீர்கள்
உமை என்றும் மறவோம் அப்பா.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

உங்கள் அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

## சாயி சேவா மத்திய சமித்தி புதிய கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம் மத்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தின் புதிய அமைவிடம் வடபிராந்திய சத்திய சாயி சேவா நிலையத்தின் தலைவர் சட்டத்தரணி ஆர்.வசந்தசேனனினால் நாவலர் வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

நிலையத்தின் பெயர் வளைவை செயலாளர் ரி.இராசரத்தினம் திறந்துவைத்தார்.

நிகழ்வில் வடபிராந்திய ஆன்மீகச் செயலாளர் கே. மகேஸ்வரன், ஆன்மீக இணைப்பாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், பஜனை இணைப்பாளர் ஸ்ரீமதி பவளம், தலைவர் கே.கனகரத் தினம் ஆகியோர் உரையாற்றினர். (அ-1-111)

## நல்லூர் பிரதேசத்தில் முத்திரையிடும் பணி

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தகர்களின் நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகள் என்பன இன்று தொடக்கம் நல்லூர் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் வைத்து பரிசோதிக்கப்பட்டு முத்திரையிடப்படவுள்ளன. இன்றுமுதல் எதிர்வரும் 6, 8, 9, 12, 11, 13, 15 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை முத்திரை இடும் பணிகள் இடம்பெறவுள்ளன.

சகல வர்த்தகர்களையும் கீழ் குறிப்பிட்ட திகதிகளில் நிறுவை, அளவை கருவிகளை பரிசோதித்து முத்திரையிடுமாறு பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (1-203)

## சந்தைகளில் சோளன் பொத்திகள்

யாழ்.மாவட்டத்தின் பல இடங்களிலும் உள்ள சந்தைகளில் சோளன் பொத்திகள் விற்பனைக்கு வரத் தொடங்கியுள்ளது.

கடந்த ஆறு மாதங்களாக ஏ-9 பாதை மூடப்பட்டு உணவுப் பொருள்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டைத் தொடர்ந்து விவசாயிகள் சோளன் உற்பத்தியில் ஆர்வம் காட்டி அதனை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டார்கள்.

அதன் பயனாக தற்போது சந்தையில் பரவலாக சோளன் பொத்திகள் விற்பனை செய்யப்படுகின்றன. மக்களும் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். (அ-1-86)

United Nations Development Programme
Sustainable human development

UNDP

UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with them on their own solutions to global and national development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range of partners.

**VACANCY ANNOUNCEMENT**

To implement UNDP initiatives in collaboration with the Government of Sri Lanka, we invite applications from qualified Sri Lankan Nationals for the following positions which are attached to Transition Programme & Mine Action Programme.

ADMINISTRATION & FINANCE ASSISTANT
DUTY STATION – JAFFNA (02 positions)

01 Transition Programme – Jaffna (Under the supervision of the Field Coordinator)
01 Mine Action Programme – Jaffna (Under the supervision of the Mine Action Officer)

- Setup finance and admin. system and procedure for the office in close consultation with the Colombo office;
- Handle all petty cash transactions and maintain records;
- Maintain computer record of all accounts and financial transactions;
- Provide accounting reports and statements as required;
- Ensure all cash kept on site is secured and accounted for;
- Regularly update the office inventory and maintain records;
- Ensure that the office equipments are maintained;
- Oversee the supply of expendable office supplies ensuring constant availability;
- Liaise with other international organizations and sister UN agencies as necessary;
- Maintain all staff personal records;
- Maintain all filing systems;
- Abide by all UN security regulations and UNDP policy and procedures;
- Perform any other duties as required.

Required Qualification:
- University Degree in finance, accounting or related field.

Experience:
- Minimum of 3 – 5 years experience in accounting and/or cash management system.
- Knowledge and experience of working with the UN agencies an asset.

Operational skills:
- Computer skills in (MS Word, Excel etc) and knowledge of spreadsheet and database packages;
- Ability to work as a member of a multi-disciplinary multi-cultural team;
- Strong negotiation and interpersonal skills with good initiative and sound judgment;
- Motivated, flexible and capable of working under pressure;
- Willingness to travel within Sri Lanka;
- Willingness to work out of normal office.

Language
- Excellent oral and written command of English and Tamil required.
- Ability to communicate in Sinhala an asset.

UNDP offers an attractive compensation package commensurate with experience. This position is a non-career appointment for limited duration with possible extensions. Please send your curriculum vitae with names of two non-related referees and contact telephone numbers to reach us within ten days of the advertisement. Applications should be addressed to the the senior Programme Officer, UNDP, 121A, Temple Road, Jaffna [illegible] of the envelope with a contact Telephone number. UNDP will only be able to respond to those applicants in whom the [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.நகல் 222 9944

# அரச பயங்கரவாதத்துக்கு துணைபோகும் சர்வதேசம்

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் இலங்கையின் வண்டவாளம் இப்போது சர்வதேச சமூகத்தின் முன்னால் தண்டவாளம் ஏறிக்கொண்டிருக்கின்றது.

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசு எனத் தன்னைக் கூறிக்கொள்ளும் நிர்வாகத்தினால் 'சட்டத்தின் ஆட்சி' என்ற பெயரின் கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் சீத்துவம் என்ன வென்பது இப்போது வெளிப்படையாகவே தென்படத் தொடங்கியுள்ளது.

'சட்டத்தின் ஆட்சி' நிலவுவதாகக் கூறப்படும் தென்னிலங்கையில் - வீதிக்கு வீதி, சந்திக்குச் சந்தி சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு ஆங்காங்கே ஆயுதங்களோடு சீருடையினர் நிறுத்தப்பட்டிருக்கும் தலைநகர் கொழும்பில் - வெள்ளை வானில் நவீன ரக ஆயுதங்களோடு வரும் இனந்தெரியாத குழுவினர், சர்வ சாதாரணமாக, சாவகாசமாக, இந்தத் தடைநிலைகளைத் தாண்டி ஆள்களைக் கடத்திச் செல்வதும், கடத்தப்பட்டோரின் உயிருக்கு அச்சுறுத்தல் விளைவித்து பெரும் தொகைப் பணம் கப்பமாக அறவிடுவதும், கடத்தப்படுவோர் பின்னர் காணாமலே போய்விடுவதும் தங்கு தடையின்றி 'வழக்கமாக' நடந்தேறுகின்றன.

அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பகுதிகளிலும், இவ்வாறு 'இனம் தெரியாத குழுவின்' கணக்கில் படுகொலைகளும், அச்சுறுத்தல்களும், கப்பம் அறவிடுதலும் என மனித உரிமை மீறல்கள் கொடி கட்டிப் பறப்பதை இப்பத்தியில் பல தடவைகள் நாம் சுட்டிக்காட்டியாகிவிட்டது.

இவ்வாறு நிலைமை மோசமடைந்திருப்பதற்கான பிரதான காரணத்தை இப்போது கோடிட்டுக் காட்டியிருக்கின்றது சர்வதேச ஜூரிகள் அமைப்பு.

'பயங்கரவாதம்' மற்றும் 'பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள்' என்பவற்றால் சட்டத்தின் ஆட்சியிலும் மனித உரிமைகள் பேணப்படுவதிலும் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக - ஜெனிவாவை மையமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவினால் - 2005இல் ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச ஜூரிகள் அணியே தனது நீண்ட, விரிவான அவதானிப்புகள் மற்றும் ஆய்வுகளின் அடிப்படையில் இக்காரணத்தை வெளியிட்டிருக்கின்றது.

பயங்காரவாத எதிர்ப்புச் சட்டவிதிகள் என்ற பெயரில் அரசு கொண்டுவந்துள்ள ஒழுங்கு விதிகளும், அதன் கீழ் வழங்கப்பட்டுள்ள கட்டுமட்டில்லா அதிகாரங்களுமே அரச படைகள் வகைதொகையின்றி மனித உரிமை மீறல்களில் ஈடுபடவும், சட்டத்துக்கு முரணான கொலைகளைத் தங்குதடையின்றிப் புரியவும் இடமளிக்கின்றன என்ற உண்மையை அந்த சர்வதேச ஜூரிகள் அம்பலப்படுத்தியிருக்கின்றனர்.

அரச துருப்புகளால் சட்டத்துக்கு விரோதமான கொலைகள், சித்திரவதைகள், வேண்டுமென்றே ஆள்களைக் காணாமற் போகச்செய்தல், முறையற்ற தடுத்து வைப்புகள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன என்று உண்மையை அம்பலப்படுத்தியிருக்கும் அந்த ஜூரிகள், இவ்வாறான நிலைமை தொடர்பாகத் தங்களின் ஆழ்ந்த கவலையையும் வெளியிட்டிருக்கின்றனர்.

'பயங்கரவாதம்' என்பது குறித்து தெளிவாகவும், திட்டவட்டமாகவும் வரையறுக்கப்படாத நிலையில் - விசாலமான கருத்து நிலைப்பாட்டுடன் - பயங்கரவாதத் தடுப்பு விதிகளும், அவசரகாலச் சட்ட ஏற்பாடுகளும் மீள அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவை எவரையும் இச்சட்டத்தின் கீழ் பயங்கரவாதச் செயலுடன் தொடர்புடைய சந்தேக நபராக்கித் தடுத்து வைக்கவும், திட்டமிட்ட முறையில் மனித உரிமை மீறல்களை மேற்கொள்ளவும் வாய்ப்பையும் வசதியையும் ஏற்படுத்தியிருக்கின்றன என்றும் சர்வதேச ஜூரிகள் அணி எடுத்து விளக்கி உள்ளது.

இத்தகைய சட்ட விதிகளின் கீழ் கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படுவதும் ஊடகங்களின் குரல்வளை நசுக்கப்படுவதும் மற்றொரு பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற சர்வதேச அமைப்புகளும் தேசிய ரீதியிலான மனித உரிமைகள் ஸ்தாபனங்களும் பல்வேறு அரசியல் கட்சிகளும் இந்த நிலைமை தொடர்பாகத் தமது கண்டனத்தையும் கவலையையும் வெளியிட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை இனப்பூசலின் விளைவாக நேரடி மோதலில் ஈடுபட்டிருப்பவை இரண்டு தரப்புகள். ஒருபுறம் விடுதலைப்புலிகள். மறுபக்கத்தில் இலங்கை அரசுத் துருப்புகளும் அவற்றின் அங்கீகாரம், அனுசரணை, ஒத்துழைப்பு, வழிகாட்டல் ஆகியவற்றின் கீழ் இயங்கும் துணைப்படைகளும்.

இதில் ஒரு தரப்பான விடுதலைப்புலிகளைப் 'பயங்கரவாதிகள்' என முத்திரை குத்தி, அவர்களைத் தடைசெய்து, துள்ளிக்குதிக்கும் - தங்களை மனித உரிமைகள் பேணப்படும் விவகாரத்தின் சர்வதேசக் காவலர்கள் எனப் பிரகடனப்படுத்தும் - மேற்குலக நாடுகள், மறு தரப்பான அரசின் 'பயங்கரவாதம்' குறித்துக் கண்டும் காணாமலுமான போக்கைக் கடைப்பிடிப்பதே இன்று நிலைமை இவ்வளவு மோசமாகி விபரீதமான கட்டத்தை அடைந்ததற்குப் பிரதான காரணமாகும்.

தன்னைச் சட்ட ரீதியான அரசு என்றும், ஜனநாயக ஆட்சியின் காவலன் என்றும் பிரகடனப்படுத்தி நிற்கும் இலங்கை அரசின், பயங்கரவாதத்தைக் கண்டும் காணாமலும் - கண்டிக்கவும், தண்டிக்கவும் - திராணியும் தெளிவுமற்று இருக்கும் சர்வதேச சமூகம், அதன் மூலம் அரச பயங்கரவாதத்துக்கு ஒத்துழைத்து, ஊக்குவித்து, ஆதரவு வழங்குகின்றது என்பதே அர்த்தம்.

விடுதலைப் போராளிகளை 'பயங்கரவாதிகள்' எனச் சித்திரித்து, அடையாளப்படுத்தி, அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைக்கு முயலும் சர்வதேச சமூகம், அரச பயங்கரவாதம் குறித்து நடவடிக்கை ஏதும் எடுக்காமல் வாளாவிருப்பதன் மூலம் அதற்குத் துணைபோய், அதனை ஊக்குவித்து வளர்க்கின்றது என்பதே பொருள்.

அரச பயங்கரவாதத்தின் ஆட்சியை கட்டுப்படுத்தப்படுவதற்குத் தன்னால் இயன்ற அனைத்து வழிமுறைகள் மூலமாகவும் நடவடிக்கை எடுக்கவேண்டிய சர்வதேச சமூகம், அந்த அரச பயங்கரவாதத்தைத் தூண்டிவிடும் வகையில் செயற்படுவதன் மூலம் அந்த அதற்கு வெளிப்படையாகத் துணை போகின்றது என்றே கருதவேண்டும்.

இனிமேலாவது திருந்துமா சர்வதேச சமூகம்?

# ஐ.நாவின் அமைதிப் படையை உடனடியாக அனுப்பி தமிழர்களின் உயிர்களைக் காப்பாற்றுக!

## செயலாளர் நாயகத்துக்கு தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கடிதம்

கொழும்பு, மார்ச்.5

ஐ.நா. அமைதிகாக்கும் படை ஒன்றினை உடனடியாக இலங்கைக்கு அனுப்பி இலங்கைத் தமிழர்களின் உயிர்களைக் காப்பாற்றுங்கள் அதன் மூலம் அமைதியை நிலைநாட்ட உறுதிப்படுத்துங்கள்.

இவ்வாறு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளும் கடிதம் ஒன்றை இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூனுக்கு அனுப்பிவைத்துள்ளார். வடக்கு, கிழக்கு, கொழும்பு மற்றும் மலையகத்திலுள்ள தமிழர்கள் சட்டவிரோதமாகக் கொல்லப்படுவது, கைது செய்யப்படுவதுமற்றும் கடத்தப்படுவதுபோன்ற சம்பவங்கள் நாளாந்தம் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு கடத்தப்படுபவர்கள் பூஸா என்ற தடுப்பு முகாமுக்குக் கொண்டு சென்று அடைக்கப்படுகின்றனர். தமிழ் ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவது, கொலை செய்யப்படுவது, அச்சுறுத்தப்படுவது குறித்தும் பொதுவாகவே இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு ஊறுவிளைவிக்கப்படுவது குறித்தும், அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் இன்றைய நிலைமை குறித்து யு.என்.எச்.சி.ஆர் கடந்த டிசெம்பரில் வெளியிட்ட அறிக்கையையும் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே அனுப்பிய கடிதம் தொடர்பாக ஐ.நா.எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதை அறியத் தருமாறு கேட்டுள்ளார். (அ-ப)

# குடாக்கடலில் மீன்பிடிக்க அனுமதி: கட்டம் கட்டமாக தொழில் செய்ய ஏற்பாடு

குருநகர், மார்ச்.5

குருநகர் மீனவர்கள் குடாக்கடலில் தொழில் செய்வதற்குப் படையினரால் நேற்று மீண்டும் அனுமதிக்கப்பட்டனர்.

குருநகரில் குருநகர் கடற்தொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் குருநகர் சென். ஜேம்ஸ் இழுவைறால் மடிச் சங்கம், குருநகர் சிறகுவலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவைகள் உள்ளன. எனினும், நேற்று குருநகர் சிறகுவலை அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 300 மீனவர்கள் மட்டுமே குருநகர் இறங்குதுறையூடாக மட்டுப்படுத்தப்பட்ட கடல் எல்லைவரை மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டனர்.

ஏனைய மீனவர்கள் ஒவ்வொரு நாளும் கட்டம் கட்டமாகவே மீன் பிடிக்க அனுமதிக்கப்படுவர் என்று குருநகர் கடற்தொழிலாளர் சங்கங்கள் தகவல் தெரிவித்தன. குடாக் கடலில் நேற்றுக் காலை மீன்பிடித் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டதை அடுத்து, நகரில் உள்ள மீன் விற்பனை நிலையங்களில் கணிசமான கடல் உணவுப் பொருள்கள் நேற்றுப் பிற்பகலில் விற்பனைக்கு வந்திருந்தன. (அ-1-51-111)

# வல்லையில் இளம் தம்பதிகள் மீது சூடு; மனைவி மரணம்; கணவன் ஆஸ்பத்திரியில்

உடுப்பிட்டி, மார்ச்.5

வல்வெட்டித்துறை, ஊறணியில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மனைவி உயிரிழந்தார். கணவன் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த பரஞ்சோதி நிஷா (வயது 20) என்பரே உயிரிழந்தவர் ஆவார். அவரது கணவரான பீற்றர் பரஞ்சோதி (வயது 23) ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மரணமான பெண்ணின் மரண விசாரணையை பருத்தித்துறை நீதிவான் க. அரியநாயகம் நேற்று நடத்தினார்.

கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னரே இவர்கள் திருமணம் செய்திருந்தனர். சம்பவ தினம் இருவரும் தொலைக்காட்சியில் படம் பார்த்துவிட்டு இரவு 9.30 மணிக்கு கிணற்றடிக்குச் சென்றனர். அப்போது வீட்டு மதிலுக்கு பின்னால் நின்ற ஆயுததாரிகள் உள்ளே வந்து இருவரையும் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

படுகாயம் அடைந்த பெண் மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார். கணவன் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்.(அ-1-115-155)

# கப்பலில் தனியார் எடுத்துவரும் பொருள்களுக்கும் விலை நிர்ணயிப்பது குறித்துக் கலந்தாலோசனை

யாழ்ப்பாணம், மார்ச் 5

குடாநாட்டுக்கு கப்பல் மூலம் தனியாரால் எடுத்துவரப்படும் பொருள்களுக்கும் விலை நிர்ணயம் செய்வது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

யாழ். நீதிமன்றத்தில் நேற்று நடந்த கலந்துரையாடலில் இந்த விடயம் கவனத்திற்கு எடுக்கப்பட்டது.

யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள், விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

தனியார் வர்த்தகர்களால் கப்பல் மூலம் எடுத்துவரப்படும் பொருள்கள் அதிக விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அப்போது -

துறைமுகத்தில் பொருள்களை இறக்குவதில் ஏற்படும் தாமதம், அதற்காகச் செலுத்தப்படும் மேலதிக கட்டணங்கள், லொறிகளில் பொருள்களை எடுத்துவருவதில் உள்ள தாமதம், அதற்கான கூடுதல் செலவுகள் ஆகியவற்றைக் குறைக்க ஏற்பாடு செய்தால், குறைந்த விலையில் பொருள்களை விற்பனை செய்ய ஏதுவாகும் என்று சம்பந்தப்பட்ட வர்த்தகர்களின் பிரதிநிதிகள் தமது கருத்தைத் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து இது குறித்து கப்பல் மூலம் பொருள்களை எடுத்துவரும் வர்த்தகர்களுடன் கலந்துரையாடி, அவர்களது நிலைப்பாடுகளையும் அறிந்த பின்னர் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்வது என முடிவு செய்யப்பட்டது.

கடந்த வாரம் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து ஏற்பட்டுள்ள [illegible] அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தனர். (அ-1)

**நாளை**

மாசி - 22
செவ்வாய்க்கிழமை
06.03.2007
திதி: துதியை
முற்பகல் : 08.53
நட்சத்திரம் : அத்தம்
பின்னிரவு 01.01
சுபநேரம் : 10.55 - 12.25
ராகுகாலம் : 03.25 - 04.55

# கோப்பாய் இராசவீதியில் குண்டு வெடித்ததில் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

கோப்பாய் இராசவீதியில் மாவீரர் மயானத்திற்கு சமீபமாக நேற்றுப் பிற்பகல் குண்டு ஒன்று வெடித்தது. சம்பவத்தில் திருகோணமலையைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் ஒருவர் மரணமானார்.

நாகலிங்கம் நகுலேஸ்வரன் என்பவர் உயிரிழந்ததாக அவரது அடையாள அட்டை மூலம் இனங் காணப்பட்டுள்ளது.

அவரது அடையாள அட்டையில் லூர்த்துமாதா கோயிலடி, பாலையூற்று, திருகோணமலை என முகவரி உள்ளதாகவும் இவரது அடையாள அட்டை இலக்கம் 800414270V எனவும் கோப்பாய் பொலிஸ் அதிகாரி தகவல் தெரிவித்தார்.

சம்பவ இடத்திற்கு யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா சென்று விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். சடலத்தை இனங்காண உதவுமாறு கோப்பாய் பொலிஸார் கேட்டுள்ளனர்.

இக்குண்டுவெடிப்பு எவ்வாறு நிகழ்ந்தது என்பது குறித்து ஊர்ஜிதமான தகவல் எதுவும் தெரியவரவில்லை. (அ-1-203)

# நலன்புரிநிலையங்களில் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மார்ச்.5

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிமனையுடன் இணைந்து, இடம் பெயர்ந்து தற்போது நலன்புரி முகாம்களில் தங்கியிருப்போருக்கு இலவச மருத்துவ முகாம்களை வாரத்தின் நான்கு நாள்கள் நடத்தி வருகிறது.

தென்மராட்சி, சாவகச்சேரிப் பகுதியில் எட்டு நலன்புரி முகாம்களில் தங்கியிருப்போருக்கு வாரத்தில் இரு நாள்களும் யாழ்ப்பாணத்தில் உள்ள 3 நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போருக்கு வாரத்தில் இரு நாள்களுக்கும் மருத்துவ முகாம் நடைபெற்று வருவதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை நிறைவேற்று அதிகாரி எஸ். குகராஜன் உதயனுக்கு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் பிரபல வைத்திய நிபுணர்களால் நடத்தப்பட்டுவரும் இம்மருத்துவ முகாமில் அனைத்துவித நோய்களுக்குமான வைத்தியப் பரிசோதனை வழங்கப்படுவதுடன், மருந்து வகைகளும் வழங்கப்படுகின்றன. (அ-79)

**வெள்ளவத்தையில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்குப் பின்னர் அவர்கள் அப்பாவி மாணவர்கள் எனத் தெரியவந்ததையடுத்து பொலிஸாரால் விடுவிக்கப்பட்டனர் என்றும் -

இவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்ட பிரதி அமைச்சர் பி. இராதா கிருஷ்ணன் தகவல் தெரிவித்தார். (க)

**பொத்துவில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று கூறப்பட்டது.

இந்த மோதல் தொடர்பாக இராணுவத்தரப்பு தகவல்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை. (ஐ)

**சூட்டுக்காயங்களுடன்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் இரவு நேரம் அப்பகுதிக்குக்கொண்டு வரப்பட்டு சுடப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ஐ-164)

**குடாநாட்டின் முடிச் செய்திகள் யாழ்ப்பாணம்**

# சாவகச்சேரியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

சாவகச்சேரி, டச்சுறோட், புளியடிச் சந்தியில் நேற்றுக்காலை 8.45 மணியளவில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மீசாலையைச் சேர்ந்த மேசன் தொழிலாளியான இராஜரத்தினம் இராஜசேகர் (வயது 28) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

குறிப்பிட்ட வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது அவரை வழிமறித்த இனந் தெரியாதவர்கள் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகவும், சுடப்பட்டவருடன் அவரது மனைவியும் இரு பிள்ளைகளும் கூடப் பயணித்ததாகவும் கூறப்படுகின்றது. (அ-1-78-202)

# கல்வியியற் கல்லூரியில் பயிற்சி பெற்றவர்களுக்கு ஆசிரிய நியமனம்

கல்வியியல் கல்லூரியில் ஆரம்பக்கல்வி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்டவர்கள், தமக்கு வழங்கப்பட்ட பாடசாலைகளில் கடமைகளுக்கு உடன் சமுகமளிக்குமாறு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார்.

நியமனம் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**யாழ். வலயம்**

கே.கிரிசா (தெல்லிப்பளை) - நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி., ஆ.இரஞ்சிதவாணி - (அனலைதீவு) வடலூர் அ.த.க.பாடசாலை, க.சிவகௌரி (வசாவிளான்) - எழுவைதீவு றோ.க.பாடசாலை.

க.யசிந்தன்(ஆனைக்கோட்டை) - நெடுந்தீவு சிகிரியாம்பள்ளம் அ.த. க.பாடசாலை, பா.யசிதரன் (மீசாலை) - நெடுந்தீவு றோ.க. மகளிர் பாடசாலை.

**வடமராட்சி வலயம்**

பிரமிளா வைகுந்தநாதன் (தும்பளை), ஜெயசித்திரா தம்பிராசா (மண்டான்), விஜிதா வீரகுமார் (செம்பியன்பற்று) இவர்களுக்குரிய பாடசாலைகள் வலயத்தினால் அறிவிக்கப்படும்.(202-88-111)

# கல்வியியலாளர் நேர்முகப்பரீட்சை இறுதித் தடவையாக

கல்வியியல் சேவை தரம் III பதவி உயர்வுக்கான நேர்முகப் பரீட்சை மார்ச் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்வி அமைச்சில் நடைபெறும். இதுவரை நேர்முகப் பரீட்சையில் சமுகமளிக்கத் தவறியவர்களை குறிப்பிட்ட தினத்தில் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வியியலாளர் சேவை தரம் III பதவி நேர்முகப்பரீட்சைகள் கல்வி அமைச்சில் ஜனவரி 16ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வந்தன. யாழ்ப்பாணத்தில் இருந்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 140 பேரில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் சமுகமளித்திருக்கின்றனர். சமுகமளிக்கத்தவறியவர்களுக்காக மார்ச் 23ஆம் திகதி இறுதியாக நேர்முகப்பரீட்சை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. அதன் பின்னர் விவரங்கள் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுவிடும் என்று கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்கு தெரிவித்தார். (அ-1-11)

# சிரேஷ்ட மாணவருக்கு சீருடை கிடைக்கவில்லை

குடாநாட்டில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் மற்றும் கிளிநொச்சி வலயத்திலும் உள்ள தரம் பத்து தொடக்கம் தரம் 13 வரையான சிரேஷ்ட மாணவ மாணவியருக்கு இந்த வருடத்திற்கான இலவச சீருடை வழங்கப்படவில்லை. கொழும்பு கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மாகாணக் கல்விப்பணிப்பாளர் வி. இராசையா சுட்டிக்காட்டியுள்ளதாக அறியவருகிறது.

இவர்களுக்கான சீருடையை வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (1-88)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின் குரல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் சுடர் ஏற்றினார். தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஒலிபரப்பை ஆரம்பித்து வைத்தார்.

புலிகளின் குரல் பொறுப்பாளர் ந.தமிழன்பன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் தமிழ்ச்செல்வன் தொடக்க உரையை நிகழ்த்தினார்.

புலிகளின் குரல் செய்மதி ஒலிபரப்பை ஆரம்பிப்பதற்கு தேசிய தலைவர் வே.பிரபாகரன் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துள்ளார் என்று தமிழ்ச்செல்வன் அப்போது கூறினார்.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் சிறப்புரையாற்றினார். (அ-1)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

862 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மீனம் 05 08 36 42

02-03-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5761709 - 5776972

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 335,106 | 10/- | 3,351,060/- |
| 2 இலக்கங்கள் | 30,725 | 20/- | 614,500/- |
| 1 இல. + லக்கினம் | 30,501 | 30/- | 915,030/- |
| 2 இல. + லக்கினம் | 2,794 | 100/- | 279,400/- |
| 3 இலக்கங்கள் | 822 | 500/- | 411,000/- |
| 3 இல. + லக்கினம் | 71 | 5,000/- | 355,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 7,225,990/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 400,028 | | 8,249,490/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 5769024-1-50 |
| கம்பஹா | 5773946-5-92 |
| மாத்தளை | 5762381-9-91 |
| கொழும்பு | 5774416-5-16 |
| பதுளை | 5765908-0-29 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## 41ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### நாகேந்திரன் அருமைதாஸ்

தோற்றம் 16.12.1974

மறைவு 24.01.2007

கடந்த 24.01.2007 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (05.03.2007) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தியேட்டர் லேன், இணுவில் கிழக்கு. (58615) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தம்பி செல்லமுத்து



வேலணை வடக்கு, 5ஆம் வட்டாரம், சோளவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி செல்லமுத்து 03.03.2007 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கட்டையர்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு-சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் செல்வனேஸ்வரி, செல்வேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் தர்மலிங்கம், நகுலாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியும் உமாதேவி, ரவீந்திரன், யாழினி, காந்தரூபன், நளினி, அன்பரசன், விஜியகுமார், கமலினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நிஷாந்தினியின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான மீனாட்சி, பொன்னு, ஆச்சிமுத்து, வள்ளியம்மை, தங்கமுத்து, கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2007) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணிமாறன் வீதி, வேலணை வடக்கு,
5ஆம் வட்டாரம். (58622)

தகவல்:
சி.செல்வேந்திரன் (மகன்).

## இந்தியாவும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கீகரித்து சிங்களப் பேரினவாதத்தில் இருந்து எம்மை விடுவிக்க உதவிட வேண்டும் என்று சர்வதேச சமூகத்திடம் கேட்டுள்ளோம்.

இலங்கை அரசபடைகள் தமிழர்களை இலக்குவைத்து, அவர்களைப் பூண்டோடு அழித்துவிடுவதற்கான அட்டூழியங்களில் ஈடுபட்டு வருகின்றன.

அதனால் தமிழர்களைப் பாதுகாக்கக் கூடிய அழுத்தங்களைப் போடவும் இந்தியா முன்வரவேண்டும்.

ஈழத்தமிழர்கள் மத்தியில் பட்டினிச் சாவும் போஷாக்கின்மையும் மலிந்துள்ளன. மிகக் குறிப்பாகச் சிறுவர்களிடம் இவை இரண்டும் பெரும் பாதிப்புகளை உண்டாக்கி வருகின்றன.

ஆகையால், சர்வதேச சமூகத்துடன் இணைந்து இந்தியா தமிழர் பிரதேசங்களுக்கு போதிய உணவுப் பொருள்களை அனுப்புவதற்கு உடன் முன்வரவேண்டும் - என்று மாவை சேனாதிராசா வலியுறுத்தினார். (அ)

## தூதர்களின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு பின்பற்றப்படவில்லை என்று கருத்துத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர், இத்தகைய வெளிநாட்டு இராஜதந்திரிகளின் விஜயத்துக்கு அவர்களுக்குப் பொறுப்பான வெளிவிவகார அமைச்சின் அனுமதி பெறப்படவில்லை என்றும் கூறினார். ஆக, பாதுகாப்பு அமைச்சிடம் மட்டுமே அனுமதி பெறப்பட்டிருக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

**பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்**

அதேசமயம் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளோ இத்தகைய விஜயங்களை ஆரம்பம் முதலேயே தாங்கள் எதிர்த்து வந்திருக்கின்றனர் எனக் கூறியிருக்கின்றார்கள்.

இதேபோன்ற கருத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் வெளியிட்டிருக்கின்றார்.

''இந்த மோசமான சம்பவம் நேர்ந்தமைக்கு நான் பொறுப்பேற்க முடியாது. இத்தகைய பிரதேசங்களுக்குச் செல்ல விரும்பிய இராஜதந்திரிகளும் இதற்கான பொறுப்பை பகிர்ந்து கொள்ளத்தான் வேண்டும்.

''இத்தகைய விடயங்களில் சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் - ஏன், இராஜதந்திரி மட்டத்தினர் கூட - இத்தகைய விவகாரங்களில் தலையிடுவதை நான் எப்போதுமே எதிர்த்தே வந்துள்ளேன். இத்தகைய பிரதேசங்களுக்கு செல்லவேண்டாம் என நான்கூறிவந்துள்ள போதிலும் அவர்கள் அதனை செவிமடுக்கவே இல்லை. அப்படிச் செய்யாதீர்கள் என்று நான் கூறினால், என் மீது பல குற்றங்களைச் சுமத்துகின்றார்கள். நான் தமிழர்களுக்கு எதிரானவன் என்றும், இந்த இடங்களுக்கு இவர்களைச் செல்லவிடாமல் செய்வதன் மூலம் எதையோ மூடிமறைக்கிறேன் என்றும் கூட குற்றம் சுமத்துகின்றார்கள்.

இவ்விடயம் குறித்து, தூதுவர்களை மட்டக்களப்புக்கு அழைத்துச் சென்ற அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் கருத்து வெளியிடுகையில், தூதுவர்களை அங்கு அழைத்துச் செல்லவேண்டாம் என யாரும் தமக்கு ஆலோசனை கூறவில்லை என்றார்.

''மனிதாபிமான உதவிகளை வழங்குவது தொடர்பான ஆலோசனைக் குழுவின் கூட்டத்திலேயே தூதுவர்களை மட்டக்களப்புக்கு அழைத்துச் செல்லும் முடிவு எடுக்கப்பட்டது. அந்த ஆலோசனைக் குழுவில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் உள்ளனர். அந்த ஆலோசனைக் குழுக் கூட்டம் கடந்த 20ஆம் திகதி என் தலைமையில் நடைபெற்றபோது - மேற்படி முடிவு எடுக்கப்பட்ட சமயம் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் அங்கு பிரசன்னமாகியிருந்தார்.

வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் மடுவகெதரவும், வெளிவிவகார அமைச்சின் பொதுசனதொடர்புப் பிரிவின்பணிப்பாளர் நாயகம் ரவிநாத் ஆரியசிங்கவும் கூட அப்போது அங்கு இருந்தனர். அது மாத்திரமல்ல, பணிப்பாளர் நாயகமும் அந்த ஹெலிகொப்டரில் எங்களுடன் இருந்தார். - என்றார் அமைச்சர் மஹிந்த சமரசிங்க. (அ-உ)


## இலவசக்கணனிப்பயிற்சி

ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனம் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.

MCS
Supported By
UNDP/JRRP

விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 10-03-2007 முன் நேரில்

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்


## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் சாரங்கபாணி (கிளாக்கர்)

மாதகல், மடத்துவாசலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சாரங்கபாணி (கிளாக்கர்) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - இளையாச்சி தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பரமசாமி, சரஸ்வதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவஞானவதி, திலகவதி ஆகியோரின் மைத்துனரும் உரித்திரபசுபதி (இளைப்பாறிய மின் அத்தியட்சகர்), தணிகாசலபதி (வர்த்தக முகாமையாளர், கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.ச), லிங்கேஸ்வரி, பழனேஸ்வரி, குமரபதி(K.V.S களஞ்சியம்,மாதகல்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுசிலா (பாப்பா), இராசமலர்(மலர்) காலஞ்சென்ற ஞானலிங்கம், தம்பிராசா, விக்கினேஸ்வரி(வசந்தி)ஆகியோரின் அன்பு மாமனும் வரதராஜன் பிருந்தா(கனடா), மயூரதன் (வைத்திய அதிகாரி, சிலாபம்), சிறி லக்ஷாயினி (வைத்திய அதிகாரி, சிலாபம்), கலைச்செல்வன் (திட்டமிடல் உதவியாளர், திருகோணமலை), தாரணி(அபிவிருத்தி உதவியாளர்காணி, திருகோணமலை) சாரங்கன் பிரபா (**Rainbow Travels**), றஜிதா (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), முகுந்தன்(மாணவன், அருணோதயக் கல்லூரி), ஜெகன் கவிதா(லண்டன்), சுதாகரன், அழகேசன் சதானி(லண்டன்), துவாரகன்(மாணவன், மகாஜனக் கல்லூரி தெல்லிப்பளை), பராபரன்(மாணவன், அருணோதயக் கல்லூரி), வராகி(பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), ஹேமானந்தன், விசாகன்(மாணவன், மானிப்பாய் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பேரனும் கிசோத்மன்,வினுசன், பிருதுவி, துளஸ்கா, கவின் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.07)காலை 11மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **பிள்ளைகள்.**

### கந்தையா இரத்தினம் (வயறிங் கிளி)



கற்குளம் லேன், கொட்டடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இரத்தினம் 26.02.2007 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் தவமணிதேவியின் அன்புக் கணவரும் தர்மலக்சுமி (ஜேர்மனி), கம்சினி, சபேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நடராசா, காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் பேரம்பலம் (சரஸ்வதி எலக்ரிக்கல் வேக்ஸ்), தவமணி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2007) திங்கட்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்குளம் லேன்,
கொட்டடி, யாழ்ப்பாணம். (58613)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

### செல்லையா யோகராசா



நல்லூர், கொண்டலடியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா யோகராசா 03.03.2007 சனிக்கிழமை லிபியாவில் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (58619)

தகவல்:
யோ.பத்மாவதி (மனைவி),
யோ.தீபன், ச.பகீர்த்தனா,
யோ.தனூர்சனா (பிள்ளைகள்).

### அந்தோனிப்பிள்ளை இம்மனுவல்

**(இளைப்பாறிய மின்சாரசபை ஊழியர்)**



யாழ்ப்பாணத்தை (குருநகர்) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை இம்மனுவல் நேற்று (04.03.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனித்தம்பி - தங்கராசம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற புஸ்பத்தின் அன்புக் கணவரும் மேரி மக்ஸ்மிலா, அன்ரனி ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.03.2007) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*25, 3ஆம் குறுக்குத்தெரு,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*

தகவல்:
**இ.இராஜ்கலிஸ்ரன் (பேரன்)**

### சூ.யுவக்கிம் [ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்]

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சூ.யுவக்கிம் 03.03.2007 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும் பற்றிக் - இசபெலா தம்பதியரின் மருமகனும் திருமதி மே.அ.யுவக்கிமின் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை) அன்புக் கணவரும் பயோ ஜெயசீலன், ஏஞ்சல், அனுஜா, தேவதாஸ், எட்வின் ஜெபகரன் (லண்டன்), சொலமன் அருள்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஞா.பி.தேவதாஸ், மனோஜா ஆகியோரின் மாமனும் கிறிஸ்ரோ, கமிலோ, எல்மோ ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை, அஞ்சலா ஆகியோரின் சகோதரனும் சூட்டி, மோகன், மனோ, அருட்திரு. செ. மகேசன் (தொடர்பகம்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.03.2007) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*கரவெட்டி,*
*நெல்லியடி.*

தகவல்:
**மே.அ.யுவக்கிம் அனுஸ்ரன்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org